DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 1712021** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW - 5 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. வேலு |
| Father's Name | : | திரு. மொட்டையகவுண்டன் |
| Village | : | மேல்தாளனூர் |
| Taluk | : | |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th March 2024. துவக்க நேரம் 12.20

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த பிரகாஷ் எனது உறவினர் ஆவார்.

2) சுமார் 2 வருடத்திற்கு முன்னால் ஒரு நாள் இரவு 11.00 மணிக்கு விபத்து நடந்தது என்று எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. நான் காலையில் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வந்து பார்த்துவிட்டு, பின்னர் விபத்து நடந்தயிடத்தை அதாவது தென்னங்குடிபாளையத்திற்கு பார்க்கச்சென்றேன். நான் பார்க்க சென்றபொழுது, அங்கு 2 போலிசார்கள் படம் வரைந்து எழுதிக்கொண்டிருந்தார்கள். என்னை விசாரித்தார்கள். நான் விபத்து நடந்தயிடத்தை பார்க்க வந்தேன் என்று கூறினேன். போலிசார் என்னிடம் ஒரு கையெழுத்து போடச்சொன்னார்கள். நானும் போட்டேன்.என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) விபத்தில் இறந்த பிரகாஷ் எனது உறவினர் என்றால் சரிதான். விபத்தில் இறந்த பிரகாஷின் பிரேதத்தை நான் முதன்முதலில் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சென்றுதான் பார்த்தேன் என்றால் சரிதான்.

2) சம்பவயிடத்திற்கு நான் சென்றதாகவும், சம்பவயிடத்தில் போலிசார் கேட்டதற்கு நான் கையெழுத்து போட்டேன் என்று சொல்லுவது தவறு என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு, வழக்கிற்காக சம்பவயிடத்தில் போட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) சம்பவயிடத்தில் நான் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் 2 கையெழுத்து போட்டேன். இந்த விபத்து குறித்து, எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் கேள்விப்பட்டுதான் சென்றேன்.

**மறுவிசாரணை** - இல்லை

முடிவு நேரம் 12.28

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Sd/-S.Munusamy.B.Sc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.